## 11th History Lesson 9 Questions in Tamil

## 9] பண்பாட்டு ஒருமைப்பாடு: இந்தியாவில் பக்தி இயக்கம்

1) தாய் தெய்வ வழிபாடு கீழ்க்காணும் எந்த இடத்தில் தொடங்கியது?

A) ஹரப்பா

B) மொகஞ்சதாரோ

C) லோத்தல்

D) காலிபங்கன்

2) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிற்பம் கீழ்க்காணும் எந்த தெய்வத்தை பிரதிபலித்தது?

A) சிவன்

B) விஷ்ணு

C) இந்திரன்

D) வருணன்

3) கீழ்க்காணும் கடவுள்களுள் வேத கடவுள் அல்லாதவர் யார்?

A) வருணன்

B) இந்திரன்

C) அக்கினி

D) பிரம்மன்

4) பொது ஆண்டுக்கு முந்திய முதலாயிரமாண்டின் இடைப்பகுதியில் சிந்து கங்கைச்சமவெளியில் தோன்றிய மதம் எது?

I. பௌத்தம்

II. சமணம்

III. சீக்கியம்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

5) ஆதிசங்கரர் உருவாக்கிய தத்துவக்கோட்பாடு எது?

A) துவைதம்

B) அத்வைதம்

C) விசிஷ்டாத்வைதம்

D) இவை எதுவும் அல்ல

6) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – தென்னிந்தியா ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை மத மறுமலர்ச்சியின் இல்லமாக விளங்கியது.

கூற்று 2 – பதினோராம் நூற்றாண்டில் ஒரு தத்துவ, சித்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது.

கூற்று 3 – பக்தி வழிபாடு அடியார்கள் கொடுத்த ஊக்கத்தினால் 14ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும் பரவியது

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

7) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பௌத்தமும் சமணமும் பெரும்பாலும் வணிக வர்க்கத்தினரால் ஆதரிக்கபட்டன.

II. பக்தி இயக்கம் நிலவுடைமை சாதிகளிடையே இருந்து தோன்றியதால் அது பௌத்தத்தையும் சமணத்தையும் விமர்சனம் செய்தது.

III. இதன் விளைவாக அரசர்களின் ஆதரவை பெறுவதில் மோதல்கள் ஏற்பட்டன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

8) தேவாரம் என்னும் நூல் கீழ்க்கண்ட யாரால் எழுதப்பட்ட பாடல்களைக் கொண்டவை ஆகும்?

A) திருநாவுக்கரசர்

B) திருஞானசம்பந்தர்

C) சுந்தரர்

D) இம்மூவரும்

9) தேவாரம் பன்னிரு திருமுறைகளுள் எந்த இடத்தில் வகிக்கிறது?

A) முதல் ஏழு திருமுறைகள்

B) எட்டு மற்றும் ஒன்பதாம் திருமுறைகள்

C) பத்தாம் திருமுறை

D) பதினோராம் திருமுறை

10) 63 நாயன்மார்கள் பற்றி கூறும் நூல் எது?

A) பெரியபுராணம்

B) சிவபுராணம்

C) அடியார் புராணம்

D) இது எதுவும் அல்ல

11) யாருடைய காலத்தில் முதன்முதலாக சைவமும் வைணவமும் ஒரு புறமாகவும் சமணம் மறுபுறமாகவும் இருந்து மோதிக்கொண்டன?

A) சேரர்கள்

B) சோழர்கள்

C) பாண்டியர்கள்

D) பல்லவர்கள்

12) தர்மசேனன் என்னும் இயற்பெயர் கீழ்க்கண்டவரில் யாருடையது ஆகும்?

A) சுந்தரர்

B) திருஞானசம்பந்தர்

C) அப்பர்

D) மாணிக்கவாசகர்

13) முதலாம் மகேந்திரவர்மன் யாரால் ஈர்க்கப்பட்டு சைவ மதத்திற்கு மாறினார்?

A) சுந்தரர்

B) திருஞானசம்பந்தர்

C) அப்பர்
D) மாணிக்கவாசகர்

14) சமணர்கள் கழுவில் ஏற்ற காரணம் என்ன?
A) பிற சமய வழிபாட்டினரை கொன்றதால்
B) இறையியல் வாதங்களில் தோற்றதால்
C) பிற சமயங்களை தூற்றியதால்
D) இது எதுவும் அல்ல

15) கீழ்க்காணும் எந்த பாண்டிய அரசன் சைவ மதத்தில் இருந்து சமண சமயத்திற்கு மாறிய பின்னர் மீண்டும் சைவ மதத்திற்கு மாறியவர்?
A) சுந்தரபாண்டியன்
B) வீர சேகர பாண்டியன்
C) மாறவர்மன் அரிகேசரி
D) வீரபாண்டியன்

16) பௌத்த சமண பாதங்களை முற்றிலுமாக எதிர்க்கும் பிரிவான 'பரபக்கம்' என்னும் பிரிவு எந்த நூலில் அமைந்துள்ளது?
A) சிவஞான சித்தியார்
B) பெரியபுராணம்
C) திருத்தொண்டர் புராணம்
D) நாலாயிர திவ்ய பிரபந்தம்

17) பௌத்தமும் சமணமும் கீழ்க்காணும் எந்த நூற்றாண்டில் முற்றிலுமாக தோற்கடிக்கப்பட்டன?
A) பத்தாம் நூற்றாண்டில்
B) பதினோராம் நூற்றாண்டில்
C) பன்னிரண்டாம் நூற்றாண்டில்
D) பதின்மூன்றாம் நூற்றாண்டில்

18) பௌத்தம் மற்றும் சமணம் ஆகியவற்றின் மையக்கருத்தான _________ சைவமும் வைணவமும் ஏற்றுக்கொண்டன.
A) அன்புடைமையை
B) பொருளுடைமையை
C) துறவறத்தை
D) உருவ வழிபாட்டினை

19) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – புறச் சமயங்கள் வடமொழியான பிராகிருதத்தை பயன்படுத்ததற்கு எதிர்வினையாக தமிழ்மொழிக்கு மேல் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
கூற்று 2 – பௌத்தமும் சமணமும் ஊழ்வினை கோட்பாட்டை பேசியபோது பக்தி இயக்கத்தை விளக்கியவர்கள் சிவனையும் விஷ்ணுவையும் சரணடைவது மூலம் விதியை வெல்ல முடியும் எனக் கூறினர்
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) இரண்டு கூற்றுகளும் சரி
D) இரண்டு கூற்றுகளும் தவறு

20) ராமானுஜர் உருவாக்கிய தத்துவக் கோட்பாடு எது?
A) துவைதம்
B) அத்வைதம்
C) விசிஷ்டாத்வைதம்
D) இவை எதுவும் அல்ல

21) கீழ்க்காணும் எந்த சமூகப் பின்னடைவுகளுக்கு எதிராக வட இந்தியாவில் பக்தி இயக்கம் குரல் கொடுத்தது?
I. சாதியை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைகள்
II. ஒதுக்கி வைத்தல்
III. பல கடவுள்களை வணங்கும் முறை
IV. உருவவழிபாடு
A) I, II, III
B) I, II, IV
C) II, III, IV
D) I, II, III, IV

22) கீழ்க்கண்டவர்களுள் இஸ்லாமிய ஞானிகளாக கருதப்படுபவர்கள் யார்?
I. சூபி
II. வாலி
III. தர்வீஷ்
IV. பக்கீர்
A) I, II, IV மட்டும்
B) I, III, IV மட்டும்
C) II, III, IV மட்டும்
D) I, II, III, IV

23) சூபியிசம் கீழ்க்காணும் எந்த நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்ற சக்தியாக விளங்கியது?
A) பத்தாம் நூற்றாண்டில்
B) பதினோராம் நூற்றாண்டில்
C) பன்னிரண்டாம் நூற்றாண்டில்
D) பதிமூன்றாம் நூற்றாண்டில்

24) சூபியிசம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
I. சூபியிசம் இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த உள்முகமான, ஆச்சரியமான மற்றொரு பக்கம் ஆகும்.
II. இவர்கள் மனித குலத்தின் மேம்பாட்டிற்காக பணி செய்தனர். இவர்கள் தத்துவஞானிகள் ஆவர்.
III. இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின் உச்சம் என சூபிகள் கருதினர்.
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) எல்லாமே சரி

25) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
I. சூபிசம் அனைத்து விதமான மத சம்பிரதாயம், பழமைவாதம், வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்தது.

winmeen.com

II. ஆன்மீக பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது
III. சூபீஸம் பல பிரிவுகளைக் கொண்டது ஆகும்.
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) எல்லாமே சரி
26) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளாக கருதப்படுவனவற்றுள் தவறானது எது?
A) பக்தி இயக்க சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையை போதித்தனர்.
B) குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.
C) ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாட வேண்டும் என வலியுறுத்தினர்
D) எந்த மொழியையும் புனிதமான மொழி என அவர்கள் கருதினர்
27) கீழ்க்கண்டவரில் ராமானந்தரின் சீடராக இருந்தவர் யார்?
A) நாமதேவர்
B) கபீர்
C) சைதன்யர்
D) குருநானக்
28) கபீர் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது தவறானது?
A) இவர் ராமானந்தரின் சீடர் ஆவார்.
B) உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு போன்றவற்றை எதிர்த்தார்.
C) இஸ்லாம் மதத்தில் இருந்த சம்பிரதாயங்களை கடுமையாக விமர்சித்தார்
D) இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரிப்பதற்கு ஆதரவு காட்டினார்.
29) சூபிசம் கொண்டுள்ள பிரிவுகளில் கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?
I. சிஸ்டி
II. சுரவார்ட்டி
III. குவாதிரியா
IV. நஸ்பந்தி
A) I, II, IV மட்டும்
B) I, III, IV மட்டும்
C) II, III, IV மட்டும்
D) I, II, III, IV
30) அவர்களில் யார் தோல் பதனிடுவோர் குடும்பத்தை சேர்ந்தவர் என வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர்?
A) நாமதேவர்
B) கபீர்
C) சைதன்யர்
D) ரவிதாஸ்
31) சீக்கியர்களின் மத பாடல்களில் யாருடைய பாடல்கள் இடம்பெற்றுள்ளன?
A) கபீர்
B) ரவிதாஸ்
C) நாமதேவர்
D) சைதன்யர்
32) சீக்கிய மதத்தை உருவாக்கியவர் யார்?
A) குருநானக்
B) குரு கோவிந்த சிங்
C) குரு அர்ஜுன் சிங்
D) நாமதேவர்
33) சீக்கிய மதத்தின் கடைசி குரு யார்?
A) குரு ராமதாஸ்
B) குரு தேக் பகதூர் சிங்
C) குரு அர்ஜுன் தேவ்
D) குரு கோவிந்த சிங்
34) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – குரு கோவிந்த சிங் சீக்கிய மதத்தின் கடைசி குரு ஆவார்.
கூற்று 2 – அவருக்குப் பின்னர் கிரந்த சாகிப் (புனித நூல்) குருவாக கருதப்பட்டது.
கூற்று 3 – குருநானக்கின் போதனைகள் குரு கிரந்த சாகிப் ஆகும்.
A) கூற்று 1, 2 மட்டும் சரி
B) கூற்று 2, 3 மட்டும் சரி
C) கூற்று 1, 3 மட்டும் சரி
D) எல்லா கூற்றுகளும் சரி
35) சைதன்யர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்?
A) பீகார்
B) குஜராத்
C) வங்காளம்
D) பஞ்சாப்
36) இறைவழிபாட்டில் குழுவாக கூடி பாட்டிசைத்து அத்துடன் பரவசத்தை ஏற்படுத்தும் நடனமாடும் பழக்கத்தை பிரபலமாக்கியவர் யார்?
A) கபீர்
B) நாமதேவர்
C) சைதன்யர்
D) ரவிதாஸ்
37) நாமதேவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்?
A) பீகார்
B) குஜராத்
C) மகாராஷ்டிரா
D) வங்காளம்
38) நாமதேவர் யாரால் ஈர்க்கப்பட்டார்?

A) ஜன தேவர்

B) சைதன்யர்

C) குருநானக்

D) ராமானந்தர்

39) அபங்க எனும் இந்து மத குருமார்கள் இறைவனைப் புகழ்ந்து எழுதிய பாடல்களை எழுதியவர் யார்?

A) ஜன தேவர்

B) நாமதேவர்

C) குருநானக்

D) ராமானந்தர்

40) அலகாபாத் என்றழைக்கப்படும் பிரயாகையில் பிறந்தவர் யார்?

A) ஜன தேவர்

B) சைதன்யர்

C) குருநானக்

D) ராமானந்தர்

41) ராமானந்தரின் சீடர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்கள் கீழ்க்கண்டவர்களுள் யார்?

I. ரவிதாஸ்

II. கபீர்

III. சூர்தாஸ்

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவர்கள் அனைவரும்

42) பிராந்திய மொழியான இந்தியில் தனது கொள்கைகளை போதித்தவர்களில் முதலாமவர் கீழ்கண்டவருள் யார்?

A) ஜன தேவர்

B) சைதன்யர்

C) குருநானக்

D) ராமானந்தர்

43) மீராபாய் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் பிறந்தார்?

A) ராஜஸ்தான்

B) பஞ்சாப்

C) மகாராஷ்டிரா

D) மத்திய பிரதேசம்

44) மேவாரின் அரசனான ராணா சங்காவின் மகனான போஜராஜன் என்பவரை மணந்தவர் யார்?

A) மீராபாய்

B) ஜான்சிராணி

C) சிந்தியா பாட்டீல்

D) இவர்கள் யாரும் அல்ல

45) சூர்தாஸ் கீழ்க்காணும் எந்த முகலாய மன்னரின் அவையில் இடம் பெற்றிருந்தார்?

A) ஷாஜகான்

B) ஜஹாங்கீர்

C) அக்பர்

D) அவுரங்கசீப்

46) கிருஷ்ணரை பற்றிய 'பாலலீலா' என்னும் என்னும் நூலை எழுதியவர் யார்?

A) மீராபாய்

B) ராமானந்தர்

C) சூர்தாஸ்

D) துக்காராம்

47) சூர்தாசரின் படைப்புகளுள் அல்லாதது எது?

A) சூர்சாகர்

B) சூர்சரவளி

C) சைத்ய லகிரி

D) தஸ்கிரா இஸிந்த்

48) துக்காராம் மகாராஷ்டிராவில் பூனாவுக்கு அருகே __________ பிறந்தார்.

A) 1600 இல்

B) 1602 இல்

C) 1604 இல்

D) 1608 இல்

49) துக்காராம் போதித்தவைகளில் கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

A) இவர் கடவுள் வடிவமற்றவர் என்றார்.

B) இவர் வேத வேள்விகள் மற்றும் சடங்குகளை நிராகரித்தார்.

C) இவர் உருவ வழிபாட்டை ஏற்றார்.

D) இவர் புனிதப் பயணங்களை நிராகரித்தார். உலக நடவடிக்கைகளில் ஆன்மீக இன்பத்தை துய்க்க முடியாது எனக்கூறினார்

50) வர்ணாசிரம கொள்கையின் படி முக்தி என்பது யாருக்கு மட்டுமே உரியது?

A) முதல் படிநிலையை சேர்ந்த மக்களுக்கு

B) முதலிரண்டு படிநிலையை சேர்ந்த மக்களுக்கு

C) முதல் மூன்று படிநிலையை சேர்ந்த மக்களுக்கு

D) நான்கு படிநிலைகளை சேர்ந்த மக்களுக்கும்